நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.77 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ஞானசேகரன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | செபஸ்தியார் | : | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |
| கிராமம் | தொண்டராயன்பாடி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 40 /2023 |

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச 317 பிரிவின்கீழ் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**<u>நாள் : 05.12.2023</u>**

**முதல் விசாரணை:**

**1)** நான் தொண்டராயன்பாடியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி, மற்ற எதிரியை தெரியும். கடந்த 02.11.2020 ஆம் தேதி அன்று மதியம் 02.30 மணி அளவில் தொண்டராயன்பாடியில் உள்ள பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தின் முன்பு எனது சித்தப்பா மகன் ராஜேஷ் என்பவரும் பேசி கொண்டிருந்தோம். அப்போது எங்கள் ஊர் வழியாக மாரனேரிக்கு செல்லும் வழியை நோக்கி ஒரு கார் ஒன்று எங்களை உரசிகொண்டு சென்றது. நாங்கள் உடனே கத்தினோம், ஏன் இவ்வாறு செல்கிறீர்கள் என்று கேட்டோம். காரில் 3 நபர்கள் சென்றார்கள். அதில் ஒருவர் இறங்கி வந்து எங்களிடம் மன்னிப்பு கேட்டார். அருகில் நின்று கொண்டிருந்த எதிரி பாக்கியராஜ் என்ன நடந்தது என்று கேட்டார். நான் நடந்ததை கூறியவுடன் அருகில் இருந்த கல்லை எடுத்து கார் கண்ணாடியை உடைப்பதற்காக அவர் சென்றார். நான் உடனே காரில் சென்றவர்கள் மன்னிப்பு கேட்டார்கள் விட்டுவிடுங்கள் என்று சொன்னதற்கு நீ என்னடா விடு என்று கூறுகிறாய் என்று சொல்லி என்னை அவிசாரி மவனே, தேவடியா மவனே என்று தகாத வார்த்தையால் திட்டி கையில் வைத்திருந்த அருவாளால் இடது உள்ளங்கை பெருவிரல் அருகே வெட்டிவிட்டார்.

2) ஆஜர் எதிரி வினோலி என்பவரும் அருவாளை எடுத்து கொண்டு வந்து என்னையும், என் சகோதரரையும் சும்மாவிடமாட்டேன் என்று மிரட்டினார். நான் உடனே எனது நண்பர் ஜெய்சங்கருடன் TMCH மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது நான் அளித்துததுதான். அது அ.சா.ஆ.1/அ.சா.1 ஆகும், போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)